# அம்பாறை நகர சபை
# அம்பாறை மாவட்டம்

------------------------------------------

## 1. நிதிசார் கூற்றுக்கள்

## 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுன் 10 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 ஒக்டோபர் 29 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

## 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் அமைய அம்பாறை நகர சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ் அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை நகர சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டின் வருமான, செலவினங்களைக் கணிப்பிடுகையில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 3 வங்கிக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகையாகிய ரூபா 4,261,484 கணக்குகளில் வெளிக்கொணரப்படவவில்லை.

(இ) சுற்றுலா விடுதியின் மதுச் சாலையிலுள்ள 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எஞ்சிய கையிருப்பு கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) கையிலுள்ள பொருட் கையிருப்பு கணிப்பிடப்படுகையில் களஞ்சியப் பேரேட்டையும் கையிருப்பையும் கணக்கிணக்கஞ் செய்யாது களஞ்சிய முற்பணப் பேரேட்டு மீதியை மாத்திரம் கருத்திற் கொண்டு கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(உ) கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டங்களில் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருவாய் ரூபா 2,488,514 மற்றும் செலவினம் ரூபா 1,007,953 என்பன கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 வங்கிக் கணக்கிணக்கம்

(அ) மூன்று ஆண்டுகளுக்கு மேலாகத் தேறாதிருக்கும் ரூபா 159,832 வைப்புகள் தொடர்பாக வங்கியில் விசாரித்துத் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஆ) கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 95,978 கூட்டுத்தொகையுடைய காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 189,486 என்பவற்றிக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 1,599,511 கூட்டுத்தொகையுடைய காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.3 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 9,625,666 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

**பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2011 மார்ச் 02 ஆந் திகதியளவில் 7 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமாப்பிக்கப்படாதிருந்தன. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடப்படக் கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 6,183,690 ஆகும்.

### 1.3.5 இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| 751 | கொள்வனவு செய்யப்பட்ட பொருட் கையிருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யப்படவில்லை. |
| 261 (3) | காசேட்டில் சய மீதிகள் காணப்பட்டன. |

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,932,554 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் 6,929,434 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | 2010 மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட மீதி | 2009 மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | தீர்வையும் வரியும் | 8815.6 | 6,742 | 13,463 | 8,966 | 7,594 | 15,291 |
| (ii) | குத்தகை வாடகை | 3,407.4 | 3,119 | 565 | 5,235 | 5,339 | 412 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1153.0 | 788 | 365 | 853 | 1,324 | - |
| (iv) | பிற வருவாய் | 13,711.0 | 13,784 | - | 9,705 | 12,262 | - |

## 2.2.2 வரி நிலுவை

(m) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 170 (i) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்வை வரி நிலுவை அறவிடத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வது சபையின் செயலாளரது பணியாகும். எனினும், அது போதியளவு நிறைவேறவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 412,422 குத்தகை வாடகை நிலுவையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 2.3 செலவின அமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம், வேறுபாடுகளுடன் கீழே காணப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது. | உள்ளபடியானது | வேறுபாடு | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது. | உள்ளபடியானது | வேறுபாடு |
| **மீண்டுவருஞ் செலவினம்** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** |
| ஆளுக்குரிய வேதனம் | 33,256 | 31,782 | 1,474 | 32,688 | 31,051 | 1,637 |
| ஏனையவை | 13,417 | 14,150 | (733) | 13,350 | 14,310 | (960) |
| உப மொத்தம் | 46,673 | 45,932 | 741 | 46,038 | 45,361 | 677 |
| மூலதனச் செலவினம் | 8,010 | 15,577 | (7,567) | 9,981 | 7,871 | 2110 |
| நிகர மொத்தம் | 54,683 | 61,509 | (6,826) | 56,019 | 53,232 | 2,787 |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| **ஊழியர் தரம்** | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளபடியானது** |
| நிறைவேற்று தரம் | 1 | 1 |
| இரண்டாந் தரம் | 23 | 23 |
| ஆரம்ப தரம் | 83 | 81 |
| பிற (சமயாசமய, தற்காலிகம்) | - | 29 |

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிக்

கூட்டுத்தொகை ரூபா 2,440,653 ஆகும்.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2005 ஆம் ஆண்டிற்கான ஊழியர் சம்பளக் கழிவுத் தொகையான ரூபா 1,271,235 2010 ஆம் ஆண்டு முடிவிலும் குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2003 ஜூன் முதல் 2010 டிசெம்பர் வரையான காலப்பகுதியின்போது சேகரித்த வருவாய் மீதான வரியாகிய ரூபா 2,275,478 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

(இ) கமநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் முறையான மேற்பார்வையுடன் நடைபெறவில்லை.

(ஈ) உள்ளுர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 2003 ஆம் ஆண்டில் பெற்ற ரூபா 4,000,000 கடனை காலவரைக்கேற்பத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு